**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2021**
**P204 இதழியல்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. இதழியல் துறை ஓர் ஆற்றல் மிக்க கருவி என்று கூறியவர் யார்?
2. வெளியாகும் செய்தியில் எதனை முன்னிலைப்படுத்துவது என்பதைக் குறிப்பிடப் பயன்படும் கலைச்சொல் எது?
3. விமோசனம் என்னும் இதழின் சிறப்பு நோக்கம் என்ன?
4. இந்தியச் செய்தித்தாளின் தந்தை யார்?
5. செய்தியின் ஆற்றலைப் பாடியுள்ள கவிஞர் யார்?
6. செய்தியாளரின் தகுதிகள் ஏதேனும் இரண்டினை எழுதுக?
7. செய்தி மூலங்களை இரகசியங்களாகக் காப்பாற்ற வேண்டியது யார் கடமை?
8. எம்.வி. காமத் துணையாசிரியரை எவ்வாறு வர்ணித்துள்ளார்?
9. மாறு வரிசை அடுக்குத்தலைப்பு என்பது யாது?
10. துணுக்குகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
11. இலக்கியத் தரமான இதழாகக் கருதப்படுவன எவை?
12. இதழ்களுக்கு இதயம் போல் அமைவது எது?
13. சொற்களுக்கு இடையில் இடைவெளி வேண்டாம் என்பதற்குப் பயன்படுத்தப்படும் திருத்தக் குறியீடு என்ன?
14. தமிழ் இதழ்களின் மொழி நடையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியவர் யார்?
15. தமிழ் நாட்டில் முதலில் அச்சுக்கூடம் உருவான இடம் எது?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. நச்சு இதழ்கள் என்றால் என்ன?
2. வெல்லெஸ்லி பிரபு திட்டம் – சிறு குறிப்பு வரைக?
3. அயல்நாட்டுச் செய்தி நிறுவனங்கள் எவை? அவற்றின் பணிகள் என்ன?
4. துணைஆசிரியருக்குரியத் தகுதிகள் யாவை?
5. தலையங்கத்தின் வகைகளை விவரி?
6. விளம்பரங்களின் நன்மை தீமைகளை எழுதுக?
7. படி எடுக்கும் முறை குறித்து விளக்குக?
8. டெலிடைப் செட்டர் என்பது யாது?

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) கால அடிப்படையிலான இதழ்கள் குறித்து கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) இந்திய மொழி இதழ்களின் சட்டங்களை விளக்கி வரைக.

2. (அ) செய்தியாளரின் தகுதிகளை கட்டுரைக்க?

(அல்லது)

(ஆ) இதழ்களின் அமைப்பும் உள்ளடக்கமும் குறித்து விளக்குக?

3. (அ) இதழ்களில் வெளியாகும் விளம்பர வகைகளைத் தொகுத்தெழுதுக?

(அல்லது)

(ஆ) அச்சுக்கலையில் வரலாறு மற்றும் அதன் வளர்ச்சி பற்றி விவரிக்க?

❋ ❋ ❋